3. ஒற்றிவைப்புத் தீர்மானங்கள்

(i) சிம்ஸன் கூட்டுக் கம்பெனி தொழிலாளர்களின் பாதுகாப்பு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. கே. கோதண்டராமன் அவர்கள் இப் பேரவையின் அலுவலை ஒற்றிவைக்க வேண்டும் என்று கோரி ஒரு தீர்மானத்திற்கு அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அதை அவர்கள் படிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவர் அவர்களே, என் பெயரால் கொடுக்கப்பட்டுள்ள, சட்டப்பேரவை நடைமுறை விதிகளின் 42-வது விதியின் கீழ் பேரவை அலுவலை ஒற்றிவைக்க வேண்டும் என்று ஒரு தீர்மானத்தைக் கொண்டுவருவதற்கு அனுமதியை நான் கோருகிறேன். என்னுடைய தீர்மான மாவது—

"சென்னை சிம்ஸன் கூட்டுக் கம்பெனியில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் 12—2—1968 தேதி காலை சுமார் 10 மணிக்கு அதிகாரிகளிடமும், அமைச்சர்களிடமும் தங்களின் குறைகளைத் தெரிவித்துக்கொள்ளுவதற்காக, ஊர்வலமாகச் சென்றவர்கள் தாக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை யிலிருந்துவரும் தொழிலாளர்களின் பாதுகாப்பைப்பற்றி விவா திக்க."

தலைவர் அவர்களே, இதையொட்டி இரண்டொரு வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இது மிக முக்கியமான பிரச்சினையாகும். எப்படியென்றால், இன்றைக்கு அங்கு . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த நிகழ்ச்சி எவ்வளவு முக்கியம் என்பதைப்பற்றி அல்ல. இது எப்படி அரசின் அன்றாட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சியாகும் என்பதைப்பற்றி மட்டும் இரண்டே வாக்கியங்களில் உறுப்பினர் அவர்கள் விளக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. வி. கே. கோதண்டராமன் : இது தொழிலாளர்களுக்குரிய ஜீவாதார அடிப்படைப் பிரச்சினையைப்பற்றியதாகும். அங்கே தகராறுக்குரிய நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகு குறிப்பாக அந்தத் தொழிற்சங்கத்தினுடைய தலைவர் ஒரு காங்கிரஸ்காரர்; அதே போன்று, அந்தத் தொழிலாளர்களுக்காக வேண்டி இருக்கக் கூடிய அந்த ஸ்டோர்ஸ் காங்கிரஸ் தலைமையின்கீழே இயங்கக் கூடியது. ஆகவே, பலதரப்பட்ட கருத்துடையவர்கள் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த நிகழ்ச்சி எப்படி அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சி என்பதை மாத்திரம் விளக்க வேண்டுமே தவிர, இதிலே யுள்ளே இருக்கும் நிகழ்ச்சிகளையெல்லாம் பற்றி கூறக்கூடாது.

திரு. வி. கே. கோதண்டராமன் : காரணத்தைச் சொன்னால் தான் நிலைமை விளங்கும். அதனால்தான் குறிப்பிடுகிறேன். இப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலேதான், அவர்களுடைய உரிமைகளைப் பற்றி அதிகாரிகளிடத்திலும் அமைச்சர்களிடத்திலும் கூறுவதற்காக வேண்டி, ஊர்வலமாகச் சென்றபோது, காங்கிரஸ்காரர்களால் தாக்கப்பட்டு, கத்தியாலும் தடியாலும் தாக்கப்பட்டு . . .

THIRU K. VINAYAKAM : Sir, that is an allegation.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள் சிகிச்சைக்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள் என்கிற இந்த நிகழ்ச்சி எப்படி அரசாங்கத்தின் அன்றாட நிர்வாகத்திற்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சியாக இருக்க முடியும்? ஆகவே, உங்களை மேலும் பேசவிடுவதற்கில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : தாக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்கள் இடதுசாரி கம்யூனிஸ்ட் கட்சியினர், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்படி வேலை நிறுத்தம் கோரி, ஊர்வலமாகச் செல்லுகிறவர்கள் தாக்கப்படுவது, தாக்கப்பட்டவர்கள் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்காக அனுப்பப்படுவது, ஆகிய இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளெல்லாம் அரசாங்கத்தின் சாதாரண அன்றாட நிர்வாக நடைமுறையிலே வரக்கூடிய நிகழ்ச்சிகளாக இருக்கின்றன. இது பேரவை அலுவலை ஒற்றி வைத்து விவாதிக்கப்படக்கூடிய அளவுக்கு அவ்வளவு சிறப்புடைய நிகழ்ச்சியாகத் தெரியவில்லை. ஆகவே, இதற்கு அனுமதி அளிக்க நான் மறுக்கிறேன்.

(ii) இராதாபுர உபவட்டத்தில் பருவ மழையின்மையும், நிலவரி, கடன் தவணை வசூலும்

திரு. நா. சௌந்தரபாண்டியன் : துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 42-வது விதியின்படி பின்வரும் பொது முக்கியத்துவமும், அவசரமும் வாய்ந்த பிரச்சினையை விவாதிக்க பேரவையின் அலுவலை ஒற்றிவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன் :

"திருநெல்வேலி மாவட்டம் நாங்குனேரி வட்டம் இராதாபுரம் உபவட்டத்தில் பருவ மழை தவறிவிட்டபடியால் நஞ்சை, புஞ்சை பயிர்கள் விளைச்சலின்றி அங்குள்ள மக்கள் உணவும், வேலை வாய்ப்பும் கிடைக்காமல் அவதிப்படும் நிலையில் விவசாயிகள் கட்ட வேண்டிய நிலவரியையும், கடன் தவணைகளையும் கட்ட அதிகாரிகள் நிர்ப்பந்தமான நடவடிக்கை எடுப்பதுபற்றி விவாதிக்க."

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பருவ மழை தவறிய தனால் பயிர்கள் பாதிப்பதும், வரி கட்ட முடியாத நிலை ஏற்படுவதும் அன்றாட நடைமுறையில் ஏற்படும் நிகழ்ச்சிகளாகும். இதற்காக பேரவையின் அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டிய தேவை இல்லை. ஆகவே இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.